செ.வெ.எண்: 297 நாள்: 09.04.2020

# கொரோனா வைரஸ் தடை உத்தரவு காலத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இடுப்பொருட்கள் சேவை தடையின்றி கிடைக்க நடவடிக்கை.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடை உத்தரவு காலத்தில் விவவசாயிகளுக்கு வேளாண்மை இடுப்பொருட்கள் சேவை தடையின்றி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்குதலில் இருந்து அனைவரையும் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. கொரோனா வைரஸ் தடை உத்தரவு காலத்தில் விவசாயிகளின் நலன் கருதி விவசாய விளைப்பொருட்கள் கொள்முதல், விதைகள் மற்றும் உரவிற்பனை நிலையங்கள், விவசாய எந்திரங்கள் மற்றும் வாடகை சேவை மையங்கள் போன்ற நடவடிக்கைகளுக்கு விளக்கு அளிக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, விவசாயிகளுக்கு தேவையான தரமான சான்று பெற்ற விதைகள், உயிர் உரங்கள் நுண்சத்துக்கள் அரசு வட்டார வேளாண்மை விரிவாக்கமையங்களிலும், அரசு உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனையாளர்கள் நிறுவனங்களிலும் வாங்கி பயன்பெறலாம். இது தொடர்பாக மேலும் விபரங்களுக்கு வேளாண்மை இணைஇயக்குநர் அலுவலக வேளாண்மை அலுவலர்(மா.தி) 8778663556 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

தரமான பூச்சி மருந்தகள், இரசாயன உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உரிமம் பெற்ற தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உரம், பூச்சி மருந்து தொடர்பான விபரங்கள் பெற வேளாண்மை இணைஇயக்குநர் அலுவலக வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) 9443026769 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

காய்கறிகள் மற்றும் பழங்கள், உழவர் சந்தைகளிலும், தனியார் காய்கனி கடைகளிலும் தினசரி நுகர்வோர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் காய்கறி வாகனங்கள், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, நபார்டு, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறைகளில் உள்ள உழவர் உற்பத்தியாளர் குழு மூலமாக இயங்கி கொண்டு வருகிறது. இப்பொருள் தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு வேளாண்மை விற்பனை மற்றும் வணிக வேளாண்மை அலுவலர் 8072760544 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

கொரோனா தடைக்காலத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு டிராக்டர், பண்ணை இயந்திரங்கள் வாடகை சேவை மையங்கள் 1.4.2020 லிருந்து 90 நாட்களுக்கு நிலம் உழவு செய்தல், நிலம் பண்படுத்துதல் மற்றும் இதர சேவைகள் அரசும், டாபே நிறுவனமும் இணைந்து இலவசமாக செய்து கொண்டு வருகிறது. வேளாண்மை பொறியியல்துறை மூலம் விவசாயிகளுக்கு கோடை உழவுப் பணி மணிக்கு ரூ.340 குறைந்த வாடகையில் செய்து தரப்படுகிறது. இது தொடர்பான விபரங்களுக்கு வேளாண்மை பொறியியல்துறை உதவிப் பொறியாளர் 9865297720 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன்பெறலாம்.

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறையிலிருந்து தற்சமயம் விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை சேமிப்பு கிடங்குகளில் 6 மாதம் வரை வைத்துக்கொள்ளலாம். கடன்பெற்ற விவவசாயிகளுக்கு வாடகை கிடையாது. கடன்பெறாத விவசாயிகளுக்கு முதல் மாத வாடகை இலவசம். மீதமுள்ள நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு குவிண்டாலுக்கு 10 பைசா வாடகை வசூலிக்கப்படுகிறது. மேலும் சேமித்து வைக்கக்கூடிய விளைப் பொருளின் மதிப்பிற்கு பொருளீட்டு கடனாக சிறு, குறு விவசாயிகளுக்கு 75 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதமும் கடனாக பெறலாம்.

இந்த கடன் தொகைக்கு முதல் 15 நாட்களுக்கு வட்டி கிடையாது. மீதமுள்ள நாட்களுக்கு விவசாயிகளுக்கு 5 சதவீதம் வட்டித்தொகை வசூலிக்கப்படும். இப்பொருள் தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு வேளாண்மை விற்பனைக்குழு செயலாளர் 8144604008 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். விவசாய சேவைகளுக்கு மேற்கண்ட நபர்களைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**